மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ), (இ) & (உ) சாஸ்தா நகர், அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், பட்டினப் பாக்கம் ஆகிய வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்புகளில் நூலகங்கள் ஏற் படுத்துவதற்காக வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான விலையை உள்ளூர் நூலக அதிகாரிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

Centrally Sponsored Rural Housing Projects

@ * 321 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the State Goverment have requested to increase the allotment of financial aid for the centrally sponsored rural housing projects in this State during 1972; and

(b) if so, the details thereof?

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் கிராம வீட்டு வசதித் திட்டங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-ல் இம்மாநிலத்தில் மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராம வீட்டு வசதித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி உதவியை அதிகப்படுத்து மாறு மாநில அரசு மத்திய அரசை வேண்டியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை. இம்மாநிலத்தில் மத்திய அரசு திட்டத்தின் கீழ் கிராமப்புற வீட்டு வசதித்திட்டம் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Complaint about a Private Management High School at Pichanur.

* S.N. 1. Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any complaint about a Private Management High School at Pichanur, Coimbatore district, has been brought to the notice of the Government;

(b) if so, the details thereof; and

(c) the action taken by the Government thereon?

@ Postponed from the list of questions for 23rd August 1972.

[1972 ஆகஸ்ட் 25

பிச்சானூர் தனியார் உயர்நிலைப் பள்ளி பற்றி புகார்

புலவர் ஓ. அறிவுடைநம்பி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டம், பிச்சானூர் தனியார் உயர்நிலைப் பள்ளி பற்றி ஏதேனும் புகார் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

(உ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பிச்சானூர் தனியார் உயர்நிலைப் பள்ளி பற்றி அப்பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள், மதுக்கரை ஊராட்சி ஒன்றிய உறுப்பினர், கோவை மாவட்ட ஆசிரியர் பேரவை ஆகியோரிடமிருந்து பல புகார்கள் அரசுக்கு வந்துள்ளன. அப்பள்ளி நிர்வாகி மீது கூறப்பட்ட முக்கிய புகார்கள் விவரம் பின்வருமாறு—

(1) ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் ஊதியம் வழங்கப்படாமல் காலந்தாழ்த்தி வழங்கப்படுகிறது.

(2) வருட இறுதியில் பள்ளியினின்று நீங்கும் ஆசிரியர்களுக்கு விடுமுறை ஊதியம் அளிக்கப்படவில்லை.

(3) சில மாதங்களில் ஒரு பகுதி ஊதியம் மட்டும் கொடுத்துவிட்டு, முழு ஊதியம் பெற்றுக்கொண்டதாக கையெழுத்து வாங்கப்படுகிறது.

(4) புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களிடம் ரூ. 500 இனமாக வாங்கப்படுகிறது.

(5) சென்ற ஆண்டு பணியாற்றிய ஆசிரியர்கள் பலரிடம் கட்டாயமாக விலகல் கடிதம் வாங்கப்பட்டுள்ளது.

(6) இவ்வாண்டு பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களிடம் வெற்றுக் காகிதத்திலும், வெற்று ரசீதிலும் கையெழுத்து வாங்கப்பட்டுள்ளது.

(7) மாணவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் செய்து தரப்படவில்லை.

(8) போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

(உ) புகார்களின் மீது பள்ளிக் கல்வி இயக்குநரின் அறிக்கை கிடைத்த பின், மேல் நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர்களின் நலனைக் கருதி பிச்சானூரில் ஒரு அரசினர் உயர்நிலைப் பள்ளியை 1972-73-ம் ஆண்டில் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 25]

புலவர் ஓ. அறிவுடைநம்பி : இன்னும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா பாக்கி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முழு விவரங்கள் இப்போது அரசிடம் இல்லை. எது சரி, எது சரியில்லை என்று அறிக்கை வந்த பிறகு தான் முடிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி : அந்த தாளாளர் ஆசிரியர்களைத் தாக்க முற்பட்டதாக எனக்குப் புகார் வந்தது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புகார்கள் சரியா, தவறு என்று இப்போது சொல்ல முடியவில்லை. பள்ளிக் கல்வி இயக்குனர் அறிக்கை வந்த பிறகு தான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

THIRU A. R. DAMODARAN : May I know why before the investigation has been completed, a new school has been started by the Government in that area?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 17—7—72 முதல் அங்கே மாணவர்கள் வேலை நிறுத்தங்கள் எல்லாம் நடைபெற்றன. அதிலே பல சமரச முயற்சிகளெல்லாம் நடைபெற்றன. அதற்குப் பிறகு ஆசிரியர் பிரதிநிதிகள், பொதுமக்கள் பிரதிநிதிகள், பள்ளித் தாளாளர் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் கூட்டம் 5—8—72-ல் நடைபெற்றது. அதிலே ஒரு நிர்வாகக் கமிட்டி, தனிக் கமிட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது, அதற்கு தாளாளர் இணங்கவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் தாளாளர் தனிப் பள்ளி ஏற்படுத்த தனக்கு ஆட்சேபனையில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே புதுப் பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில், அதற்குரிய நிபந்தனைகளெல்லாம் நிறைவேற்றப் பட்டால், அதற்கு அனுமதி அளிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கான நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றித் தருவார்களாயின், இந்த அனுமதி அளிக்கலாம், தனிப் பள்ளி ஏற்படுத்தலாம் என்று கூறி, 17—8—72-ல் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : ஏற்கனவே இருந்த பள்ளியில் இருந்த ஆசிரியர்கள் ராஜிநாமா செய்யாமல் புதிய பள்ளிக்குப் போயிருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த பள்ளியிலிருந்து விலகாமல் புதிய பள்ளியில் சேர்ந்து நடத்துவது சட்டப்படி சரியா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களாக விருப்பப்பட்டு வருவார்களானால், மாணவர்களையும் மற்றவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம்

என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. கட்டாயப்படுத்தப்பட்டது கிடையாது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல் இருந்தால், சட்டதிட்டத்திற்குப் புறம்பாக இருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : அந்தப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள், தாளாளர் காரணம். புதுப் பள்ளியில் ஆசிரியர்கள் சேர்ந்திருப்பதால், பழைய பள்ளியில் ராஜிநாமா செய்யப்படவில்லை என்ற செய்திகள் வந்துள்ளது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களும் மாணவர்களும் விரும்பிச் சேர்ந்தால், சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்று பார்த்து, அதிலே குறைபாடுகள் இருந்தால், அதைக் கவனித்து அவசியம் ஏற்பட்டால், அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I wish to point out that such questions pertaining to Members of this House create a lot of embarrassment and if such questions are going to be allowed, any Member may ask any question relating to any other Member. It may spoil the cordiality in the House. I just plead with you on this matter.

MR. CHAIRMAN : That is all right.

THIRU V. ISVARMURTI : Sir, I would like to know from the Hon. Minister, whether on 7th August 1972 about 200 students came to school to attend the classes and whether the classes were not conducted by the Headmaster. May I know whether the Government received any representation from the parents who accompanied the students to Schools and also whether these representatives went in person to the District Collector and the District Educational Officer? May I also know whether the Government are aware of the fact that when the students reported to School on 7th August 1972, some outsiders prevented the School from functioning?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பள்ளிக் கல்வி இயக்குநர் அறிக்கையில் அது பற்றிய விவரம் என்னிடத்தில் கொடுக்கப்படவில்லை. அத்தகைய முறையீடுகள் வரும்போது ஆராய்ந்து பார்த்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்கலாம், அந்த விவரங்கள் கிடைக்கவில்லை.

THIRU V. ISVARMURTI : Is the Hon. Minister aware of the fact that the Correspondent of the School has written to the Government that he is not going to close the school and is going to keep it open since the students are continuing to come to the school? When this is the situation why, how and on what grounds have the Government now transferred the teachers and forcibly transferred some records, the Transfer Certificates, etc., to the Government School?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும். பெற்றோர்களும் மற்றவர்களும் அந்தப் பள்ளி நடைபெறுமவிருப்பதாலும், மாணவர்களுக்கு வேறு பள்ளி இல்லாத காரணத்தாலும், ஏற்கனவே இருந்த பள்ளியை மூட உத்தரவிடாமல் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவார்கள். ஆனால் அந்த அளவுக்கு அனுமதி அளிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், முழு விவரத்திற்கு என்ன நிலைமை என்று கண்டறிந்து சொல்லப்படும்.

உடுக்குறியிடப்படாத வினாக்கள்.

Planning Commission.

30.*Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Planning Commission has suggested guide-lines for the formulation of the Annual Plan of the State for the year 1972–73;

(*b*) if so, what are their suggestion regarding stability of prices in the State; and

(*c*) how the same is going to be followed up?

A.—(*a*) Yes. Separate guide-lines for individual sectors of developments have been received.

(*b*) Regarding stability of prices in the State no definite guide-lines have been received from the Planning Commission;

(*c*) Does not arise.